தரையிறங்குவதில் சிக்கல் என்ற தகவல் அறிந்தவுடன் முதல்வர் துரித நடவடிக்கை!

# திருச்சி - ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானத்தை பாதுகாப்பாக தரையிறக்கிய விமானி - விமானக் குழுவினருக்குப் பாராட்டு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, அக். 13-

திருச்சியிலிருந்து சார்ஜா புறப்பட்ட விமானத்தில் திடீர் கோளாறு ஏற்பட்டதால் அந்த விமானம் திருச்சியிலே தரையிறங்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் விமானத்தில் சிக்கல் ஏற்பட்டதைத் தொடர்ந்து விமானம் திருச்சி வானத்தில் இரண்டு மணி நேரம் வட்டமடித்தப்படியே இருந்தது.

இச்செய்தியறிந்ததும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அலுவலர்களுடன் உடனடியாக தொலைபேசி வாயிலாக அவசரக் கூட்டத்தை கூட்டி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து திருச்சியில் விமானம் பத்திரமாக தரையிறங்கியதும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாதுகாப்பாக விமானத்தை தரையிறக்கிய விமானி மற்றும் விமானக் குழுவினருக்கு பாராட்டை தெரிவித்து சமூக வலைதளங்களில் பதிவு செய்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு

**ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம் பாதுகாப்பாகத் தரையிறங்கியதை அறிந்து நிம்மதி அடைந்தேன். தரையிறங்குவதில் சிக்கல் என்ற தகவல் கிடைத்ததும், அலுவலர்களுடன் உடனடியாக தொலைபேசி வாயிலாக அவசரக் கூட்டத்தைக் கூட்டி, தீயணைப்பு வாகனங்கள், ஆம்புலன்ஸ்கள், மருத்துவ உதவிகள் எனத் தேவையான அனைத்துப் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் தயார்நிலையில் வைத்திட அறிவுறுத்தி இருந்தேன்.**

**பயணிகள் அனைவரும் தொடர்ந்து பாதுகாப்பாக இருப்பதை உறுதிசெய்யவும், அவர்களுக்கு மேற்கொண்டு தேவைப்படும் உதவிகளை வழங்கவும் மாவட்ட ஆட்சியரிடம் தற்போது கூறியுள்ளேன்.**

**பாதுகாப்பாக விமானத்தைத் தரையிறக்கிய விமானி மற்றும் விமானக் குழுவினருக்கும் எனது பாராட்டுகள்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் – கவரப்பேட்டையில் ரயில் விபத்து!

# முதல்வர் உத்தரவுப்படி - விபத்து நடந்த இடத்திற்கு அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் விரைந்தார்!

## காயமடைந்தவர்களுக்கு உடனடி சிகிச்சை – மீட்புப் பணிகள் தீவிரம்!

திருவள்ளூர், அக்.13-

திருவள்ளூர் மாவட்டம் - கவரப்பேட்டை ரயில் விபத்து செய்தியறிந்ததும் துரிதமாக சூழ்நிலையை கண்காணிக்கவும், காயமடைந்தவர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கவும் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், தலைமைச் செயலாளர் மற்றும் மாவட்ட ஆட்சியர்க்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டார். இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு அமைச்சர் சா.மு.நாசர் ஆய்வு மேற்கொண்டதுடன் துரிமாக மீட்புப் பணியில் ஈடுபட்டார்.



சென்னை பெரம்பூர் வழியாக கர்நாடக மாநிலம் மைசூரில் இருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு திருவள்ளூர் மாவட்டம் கவரப்பேட்டை நோக்கி பீகார் மாநிலம் தர்பாங்காக்கு எக்ஸ்பிரஸ் விரைவு ரயில் சென்று கொண்டிருந்தது. கவரப்பேட்டை அருகே நின்று கொண்டிருந்த சரக்கு ரயில் மீது எக்ஸ்பிரஸ் ரயில் மோதிய விபத்தில் 10 பெட்டிகள் தரம் புரண்டன இதில் இரண்டு குளிர்சாதன பெட்டிகள் தீ பற்றி மலமல என எரிந்தது இதனை கண்ட அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் மற்றும் தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த ரயில்வே துறை ஊழியர்கள் மற்றும் தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

### முதல்வர் இரயில்வே அதிகாரியிடம் தொலைபேசியில் கேட்டறிந்தார்!

இந்நிலையில் திருவள்ளூர் மாவட்டம, கவரப்பேட்டையில் ரயில் விபத்து ஏற்பட்ட செய்தியறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெற்கு ரயில்வே அதிகாரியிடம் விபத்து குறித்து தொலைபேசியில் கேட்டறிந்தார். அதனைத் தொடர்ந்து தலைமைச் செயலாளர், மாவட்ட ஆட்சியர் ஆகியோர் சம்பவம் நடந்த இடத்தை நேரில் சென்று கண்காணிக்க உத்தரவிட்டுள்ளார்.

சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் நேரில் சென்று சூழ்நிலையை கண்காணிக்கவும் முதல்வர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

மேலும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ரயில் விபத்தில் காயமடைந்த பயனிகளுக்கு தேவையான சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்நாடு சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடு வாழும் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விபத்து நடந்த இடத்தினை பார்வையிட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் விபத்து குறித்து கேட்டு அறிந்து ரயிலில் பயணித்த பயனாளிகளுக்கு உதவி செய்து தரப்படும் என்று தெரிவித்தார். மேலும் மீட்பு பணிக்கான பணிகளை மேற்கொண்டார்.

படுகாயம் அடைந்தவர்களை கவரப்பேட்டை அரசு மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிகழ்வின் போது தலைமைச் செயலாளர், மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

எச்.ஐ.வி/எய்ட்ஸ் மற்றும் பால்வினை

# தொற்று தொடர்பான விழிப்புணர்வுப் பிரச்சாரம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்றார்!

சென்னை, அக்.13-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 10.10.2024 அன்று சென்னை, கலைவாணர் அரங்கில், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் சார்பில், எச்.ஐ.வி/ எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய் தொற்று குறித்த விழிப்புணர்வு பிரச்சாரம் 2024 நிகழ்ச்சியில் கலந்து கொண்டு விழிப்புணர்வு கண்காட்சியினை பார்வையிட்டு, கையெழுத்து பிரச்சார இயக்கத்தை தொடங்கி வைத்தார்.

பின்னர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியாசாகு, தலைமையில் விழிப்புணர்வு பிரச்சார உறுதி மொழி ஏற்கப்பட்டு, சென்னையில் உள்ள மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய மஞ்சைப்பைகளை பொதுமக்களுக்கு மருந்தகங்களின் மூலம் திட்டத்தினை தொடங்கி வைத்து, *State level online Quiz* போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குபரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் 10 கல்லூரிகளில் புதிதாக செஞ்சுருள் சங்கங்களை துவக்கி எச்.ஐ.வி / எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

### வாழ்வியல் திறன் மேம்பாட்டுப் பயிற்சி!

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் தொடர்ச்சியான “தீவிர விழிப்புணர்வு பிரச்சாரம்” மூன்று மாதங்களாக (ஆகஸ்ட் 2024 முதல் அக்டோபர் 2024 வரை) நடத்தப்பட்டு வருகிறது. எச்.ஐ.வி / எய்ட்ஸ் மற்றும் பால்வினை தொற்று தொடர்பான விழிப்புணர்வு அனைத்து பிரிவினருக்கும் சென்றடைவதே இதன் நோக்கம். இளைஞர்கள் மற்றும் இளம்பருவத்தினர் இடையே விழிப்புணர்வை ஏற்படுத்த இணையதளம் வழியாக வினாடி-வினா போட்டிகள் நடத்தப்பட்டும், மனித சங்கிலி பேரணிகள் மற்றும் மாரத்தான் போட்டிகளை 2329 செஞ்சுருள் சங்கங்களின் (Red Ribbon Club) பங்கெடுப்புடன் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், 9 மற்றும் 11-ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு “வாழ்வியல் திறன் மேம்பாட்டு பயிற்சி” மாநில கல்வியியல் மற்றும் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக *Flash Mob Shows* மற்றும் தன்னார்வ இரத்ததான முகாம்கள் நடத்தப்பட்டது. கல்லூரிகளில் பயிலும் இளம் மாணவ - மாணவியர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதால் தமிழ்நாட்டில் தலைசிறந்த பொறுப்பான எதிர்கால சமுதாயத்தை உருவாக்க முடியும்.

இந்தியாவில் மிஷோராம் மற்றும் நாகாலாந்து மாநிலங்களில் 1% சதவிகிதத்திற்கும் மேலாக எச்.ஐ.வி. தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தமிழ்நாட்டில் எச்.ஐ.வி./ எய்ட்ஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் 0.16 சதவிகிதமாக உள்ளது. தமிழ்நாட்டில் 104 தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும்சமூக தொண்டு நிறுவனங்கள் செயல்படுகிறது. மேலும், 34 இளைப்பாறுதல் மையங்களை சமூக தொண்டு நிறுவனங்கள் மூலமாக தமிழ்நாடு அரசின் நிதி உதவியான ரூ.2.41 கோடியில் செயல்படுத்தப்படுகிறது.

மேற்கண்ட சமூகம் சார்ந்த சங்கங்களின்பங்களிப்பால் எச்.ஐ.வி./ எய்ட்ஸ் திட்டங்கள் தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. பள்ளிகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களும், கல்லூரிகளில் பேராசிரியர்களும் தங்களது ஈடுபாட்டினால் செஞ்சுருள் சங்கங்கள் வாயிலாக எச்.ஐ.வி. / எய்ட்ஸ் பரவலை கட்டுக்குள் கொண்டு வருவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தியதற்காக பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டது. எச்.ஐ.வி. தொற்றுள்ள நபர் பயன்படுத்திய ஊசியை மற்றொருவர் பயன்படுத்துவதாலும், பாதுகாப்பற்ற பாலியல் தொடர்பு மற்றும் பரிசோதனை செய்யப்படாத இரத்தத்தை ஏற்றுவதாலும் எச்.ஐ.வி. தொற்று ஏற்படலாம். எச்.ஐ.வி. தொற்றுள்ள தாய் உரிய மருத்துவ சிகிச்சை எடுத்துக் கொள்ளாமல் குழந்தை பெற்றுக்கொள்ளும் பொழுது குழந்தைக்குதொற்று ஏற்பட வாய்ப்புள்ளது.

இந்தியாவை பொறுத்த அளவில் எச்.ஐ.வி. தொற்றுடன் வாழும் நபர்கள் 16,80,083 உள்ளார்கள். தமிழ்நாட்டில் எச்.ஐ.வி. தொற்றால் 1,32,383 நபர்கள் கூட்டு மருத்துவ சிகிச்சை பெற்று வருகின்றனர். தமிழ்நாட்டில் 2010-ல் 0.38% ஆக இருந்த தொற்று, மக்களிடையே ஏற்படுத்தப்பட்ட விழிப்புணர்வு மற்றும் ஒத்துழைப்பின் மூலம் 2023-ஆம் ஆண்டு கர்ப்பிணிப் பெண்களிடையே நடத்தப்பட்ட கணக்கெடுப்பின் படி எச்.ஐ.வி. தொற்று 0.16%ஆக குறைந்துள்ளது. 15 முதல் 49 வயதுக்குட்பட்ட நபர்களிடையே எச்.ஐ.வி. / எய்ட்ஸ் பரவலின் மதிப்பீடு 2010-ஆம் ஆண்டு 0.35 சதவிகிதமாக இருந்தது 0.20 சதவிகிதமாக 2023ல்குறைந்துள்ளது.

### 403 பரிசோதனை மையங்கள்!

தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பில் எச்.ஐ.வி/எய்ட்ஸ் பரிசோதனைக்காக 311 எச்.ஐ.வி ஆலோசனை பரிசோதனை மையங்கள் அனுமதிக்கப்பட்டது. தேசிய சுகாதார குழுமத்தின் நிதி உதவியுடன் 403 பரிசோதனை மையங்களும், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் 2119 முதற்கட்ட எச்.ஐ.வி பரிசோதனை மையங்களாக செயல்படுகிறது.

மேலும் 19 தனியார் மருத்துவக் கல்லூரிகள் இவற்றுடன் இணைந்து செயல்படுகிறார்கள். மேலும் 104 அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமூகம் சார்ந்த சங்கங்கள்தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்துடன் இணைந்து முதற்கட்ட பரிசோதனை செய்து வருகின்றனர். தற்போது வளர்ந்துள்ள அறிவியல் புரட்சியின் காரணமாக சமூக ஊடகங்கள் மற்றும் இதர வழிகளில் இளைஞர்களின் கவனத்தை சிதறவிடாமல்விழிப்புணர்வுடன்செயல்பட்டு வருங்கால தலைவர்களாகவும் படைப்பாளர்களாகவும்உருவாக வேண்டும்.

எச்.ஐ.வி தொற்று எதன் மூலம் பரவும், எதன் மூலம் பரவாது என்பது அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டிய ஒன்றாகும். அப்போதுதான் பாதுகாப்பாக விழிப்புடன் வாழவும், எச்.ஐ.வி/எய்ட்ஸ் உள்ளவர்களை புறம் தள்ளாமல் சமுதாயத்தில் ஒன்றிணைந்து வாழ வேண்டும். தமிழ்நாட்டில் வாழும் எச்.ஐ.வி தொற்றுள்ளநபர்களில் 91 விழுக்காடு நபர்கள் தன் நிலையை அறிந்துள்ளார்கள்.

இந்திய அளவில் 81 விழுக்காடு மட்டுமே தன் நிலையை அறிந்துள்ளார்கள். தமிழ்நாட்டில் அனைத்து சிறைச்சாலைகளிலும் எச்.ஐ.வி/எய்ட்ஸ் பரிசோதனைகள் நடத்தப்பட்டு, தொற்றுள்ள நபர்களுக்கு கூட்டு மருந்து சிகிச்சை வழங்கப்படுகிறது. 2009ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் நிதி உதவியுடன் நூற்றாண்டு கண்ட கலைஞர் ஆட்சியில் ரூ.5.00 கோடி வைப்பு நிதியை மூலதனமாகக் கொண்டுதுவக்கப்பட்ட அறக்கட்டளை தற்போது ரூ.25 கோடியாக வளர்ந்துள்ளது. அதன் வைப்பு நிதியிலிருந்து கிடைக்கப்படும் வட்டியைக் கொண்டு சுமார் 7500 எச்.ஐ.வி தொற்றுபாதிப்புக்குள்ளான மற்றும் பாதிக்கப்படாத குழந்தைகளுக்கு ஊட்டச்சத்திற்காகவும், கல்வி நிதியாகவும் ஆண்டுக்கொரு முறை வழங்கப்படுகிறது என்றுதமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிகழ்வில் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்க திட்ட இயக்குநர் திருமதி.ஆர்.சீதாலட்சுமி, மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, சென்னை மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.தேரணிராஜன், ஓமந்தூரார் தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.மணி, சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு. லியோ டேவிட், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக் குழுத் தலைவர் (சுகாதாரம்) மரு.சாந்தகுமாரி, சென்னை மாநகராட்சி நல அலுவலர் மரு. ஜெகதீசன், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்க இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், உயரலுவலர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# அழகிய உருவம் எங்கே? அமைதியின் வடிவம் எங்கே?



கல்லுமே கரையு மே!உன்
  கலைமுகம் கண்டால்! அச்சு
வெல்லமே உன்ப டைப்பு!
  வெல்லுமே பகையை! வெள்ளை
முல்லையின் உள்ள மே!நம்
  முத்தமிழ் அறிஞ ருக்குச்
செல்லமே! செல்வ மே! நீ
  சென்றதேன் எம்மை விட்டே?

உரைநடை எழுத்துச் செல்வம்!
  உயர்தரக் கருத்துச் செல்வம்!
தருவாகிப் பயன்வி ளைக்கும்
  தமிழ்ச்செல்வம்! தாய்வ யிற்றில்
கருவான அறிவுச் செல்வம்!
  கழகத்தின் கொள்கைச் செல்வம்!
திருவாரூர் கொடைய ளித்தத்
  திராவிடச் செல்வம் நீதான்!

சத்தியம் உனது செல்வம்!
  சமத்துவம் உனது செல்வம்!
முத்தமிழ் உனது செல்வம்!
  “முரசொலி” உனது செல்வம்!
பத்தரை மாற்றுப் பொன்போல்
  பண்பில்நீ உயர்ந்த செல்வம்!
சித்தத்தில் கலந்த எங்கள்
  செல்வத்துட் செல்வம் நீதான்!

கல்வியிற் சிறந்த செல்வம்!
  கட்டுரை வரைந்த செல்வம்!
சொல்வளம் மிகுந்த செல்வம்!
  சுயமரி யாதைச் செல்வம்!
நெல்வயல் போலும் ஆற்றல்
  நிறைந்தநற் செல்வம்! எங்கள்
“செல்வியின் செல்வ மான
  செல்வமே” சென்ற தெங்கே?

முழுநிலா வெளிச்சக் கண்கள்
  மூடிற்றோ! அந்தோ! அன்பைப்
பொழிகின்ற பார்வை எங்கே?
  பூஞ்சிரிப் பெங்கே? மின்னும்
அழகிய உருவம் எங்கே?
  அமைதியின் வடிவம் எங்கே?
மொழியுணர் வூட்டி வைத்த
  “முரசொலிப் புதையல்” எங்கே?

தூண்டினார்! குற்றச் சாட்டு
  சுமத்தினார்! சட்ட மன்றக்
கூண்டிலே ஏற்றி னார்!நீ
  குறுநகை புரிந்து நின்றாய்!
தாண்டினாய் தடையை! அன்புத்
  தலைவரை நெகிழ வைத்தாய்!
மூண்டதோர் எதிர்ப்பை யெல்லாம்
  “ முரசொலி”க் காக ஏற்றாய்!

நேர்எதிர் குணமாய், நீரும்
  நெருப்புமாய் உடன்பி றந்தீர்!
நீரோடை தம்பி! கோப
  நெருப்பன்றோ அண்ணன் மாறன்!
கூர்தீட்டும் அண்ணன் கோபம்!
  குளிர்விக்கும் உன்றன் ஈரம்!
தூரம்நீ சென்றாய்! நெஞ்சில்
  சுமைதாங்கி டாத பாரம்!

“கலைஞரின்” மறைவுக் குப்பின்
  கண்ணீரைப் பொழிந்த வண்ணம்
தலையிலே அடித்துக் கொண்டு
  “தளபதி” அழுத காட்சி
மலைகூட உருகும்! எங்கள்
  மனம்என்ன ஆகும்? சோக
வலையிலே எம்மை வீழ்த்தி
  வழியில்ஏன் பிரிந்தாய் ஐயா!

துளைத்ததே கொடிய செய்தி!
  துடித்ததே இதயம் யாவும்!
வளைத்ததே மனத்தைத் துன்பம்!
  வழியும்கண் ணீர்து டைத்தே
களத்தில்நீ விட்டுச் சென்ற
  கடமையைத் தொடர்வோம்! எங்கள்
உளத்தில்நீ என்றும் வாழ்வாய்
  உயிர்ப்பூவாய்!வணங்குகின்றோம்!



கவிச்சுடர்
கவிதைப் பித்தன்